---

## 1.1 நிதிக் கூற்றுக்கள்

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

பல்கலைகழகக் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழக கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழக கல்லூரியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழக கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

**நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1968 இன் 25 ஆம் இலக்க பொது பரீட்சை சட்டத்தின் 10 ஆம் உறுப்புரை | பல்கலைக்கழக கல்லூரியின் 2016 ஆம் ஆண்டில் இணைப்பு செய்யப்பட்ட மாணவர் குழுவின் NVQ 6 ஆம் மட்டத்தின் II ஆம் செமஸ்டரின் பதில் பத்திரிகை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சோதிப்பாளரிடம் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | புள்ளி வழங்கும் செயன்முறை நிறைவடைந்ததுடனே பதில் பத்திரிக்கை முறையாக பெற்றுக் கொடுத்தல் பல்கலைக்கழக கல்லூரியின் சாதாரண நடைமுறையாகுவதுடன் மீண்டும் அது தொடர்பாக அனைத்து கல்விசார் பதவியணியினருக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து உத்தியோகத்தர் களும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழ கல்லூரியின் செயல்வழிக் கை நூலின் 4.7.3 (ஓ) உறுப்புரை | ஒவ்வொரு கற்கைநெறிகளினதும் மாணவர்களுக்காக நாளாந்தம் இடம்பெறுகின்ற விரிவுரை மற்றும் பிரயோக பயிற்சி நடவடிக்கைகள் குறிக்கப்படுவதற்காக மற்றும் விரிவுரைகளை மேற்பார்வை செய்து அறிக்கை இடுவதற்காக செயன்முன்னேற்ற அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கற்கை நெறிகளினதும் கல்வி அறிக்கை இடுகைகள் வரும் மாதத்திலிருந்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | செயல்வழிக் கோவையின் பிரகாரம் செயன்முன்னேற்ற அறிக்கை பேணப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கை | ரூபா 6,411,532 பெறுமதியான கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள்களுக்கு தொடர்புடையதாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் இருந்து பேணப்பட்டு வந்த நிலையான சொத்து பதிவேடு நாளதுவரையாக்கப்ப டுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணினி மற்றும் மென்பொருள் தொடர்பாக தனி சொத்து பதிவேடொன்று பேணிச்செல்லல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,488,772 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 825,352 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,663,420 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ் அதிகரிப்பிற்கு மீண்டெழும் அளிப்பு ரூபா 272,000,000 அதிகமாக பெறல் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 2,426,131 இனால் குறைதல் பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயன்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக கல்லூரியினால் நடத்தப்படுகின்ற NVQ கற்கைநெறிகள் நிறைவு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் அம் மாணவர்களுக்காக உயர் தொழிநுட்ப சான்றிதழ் வெளியிடப்பட வேண்டியிருப்பினும், 2016 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டிருந்த மாணவர் குழுக்களுக்கு 05 ஆண்டுகள் கடந்திருப்பினும் கற்கைநெறி நிறைவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலத்தினுள் அவ்வப்போது ஏற்பட்ட மாணவர் எதிர்ப்புக்களின் காரணத்தினால் விரிவுரைகளுக்கு பங்குபெறாமை, நீண்டகால வகுப்பு நிறுத்தங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணத்தினால் அவர்களின் கற்கைநெறி காலம் நீடிக்கப்பட்டன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு குறித்த வண்ணம் பரீட்சை நடத்தப்பட்டு குறித்த காலத்தில் நிபுணரை உருவாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழ கல்லூரியின் ஊடாக நடத்திச் செல்லபபடுகின்ற ஒரு கற்கைநெறிக்காக இணைக்கப்படுகின்ற மாணவர் எண்ணிக்கை 35 ஐ விட குறைவாக இணைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆரம்பத்தில் கற்கைநெறிகள் விட்டுச்செல்வோர் காரணத்தினால் ஏற்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு தெளிவான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பின்னூட்டல் (feedback) பெற்றுக் கொள்ளும் முறையொன்று தயாரிக்கப்பட்டு கற்கைநெறி விட்டுச்செல்வதற்கான காரணங்கள் தேடி அறியப்பட்டு மாணவர்கள் கற்கைநெறி நிறைவடையும் வரையில் நிறுத்தி வைக்கப்படுவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கற்கைநெறியொன்றிற்கு இணைக்கப்படக் கூடிய உயர்ந்தப்பட்ச திறன் பேணப்பட்டு மனித மற்றும் பௌதீக வளங்களின் உயர்ந்தபட்ச பயனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக கல்லூரியின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற 09 கற்கைநெறிகளுக்காக 2017 மற்றும் 2018 மாணவர் குழுக்களுக்காக திட்டமிடப்பட்ட 10,090 பிரயோக செயற்பாடு மணித்தியாலங்களில் 705 மணித்தியாளங்கள் மட்டும் நிறைவேற்றப்பட்டதனால் கற்கைநெறிகளுக்கு தேவையான மணித்தியாள அளவுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுக்கூட வசதிகளில் காணப்படுகின்ற குறைப்பாடுகள் மற்றும் சில கற்கைநெறிகளுக்காக ஆய்வுக் கூடங்கள் காணப்படாமையினால் அவை பூர்த்தி செய்யப்படுவதற்காக கல்வி சுற்றுலாக்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு தொடர்புடைய மணித்தியால அளவு பூர்த்தி செய்யப்படாததுடன் பாடம் பூர்த்தி செய்யப்படுகின்றது. | பிரயோக செயற்பாடுகளுடனான பண்புள்ள நிபுணரொருவர் உருவாக்கப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரை 09 கற்கைநெறிகளுக்காக இணைக்கப்பட்ட மாணவ குழுக்களில் 2015 குழு மட்டும் கற்கைநெறியினை நிறைவு செய்திருந்ததுடன், அவ் இணைக்கப்பட்ட மாணவர் குழுவில் 80 மாணவர்கள், அதாவது 67 சதவீதமானோர் கற்கைநெறியை தொடர்ச்சியாக தொடர்ந்தனர். இவ் 80 மாணவர்களில் 35 மாணவர்கள், அதாவது 44 சதவீதமானோர் பரீட்சை சித்தியடையாத காரணத்தினால் கற்கநெறியினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | கற்கைநெறியின் இடையில் கற்கைநெறியினை விட்டுச் செல்லல், சில மாணவர்கள் சட்ட ரீதியாக பல்கலைக்கழ கல்லூரியிலிருந்து விலகாமையின் காரணத்தினால் கற்கை நெறியினை தொடர்ந்த மாணவர் எண்ணிக்கை அதிக பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. அது சித்தி பெற்ற சதவீதத்தினை கீழ் மட்டத்தினை காண்பிப்பதற்கு தாக்கமளித்திருந்தது. | அசாதாரண ரீதியாக பரீட்சையை சித்தியடையானமைக்கான காரணங்கள் தேடி அறியப்பட்டு அவற்றிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 மற்றும் 2018 மாணவ குழுக்களுக்காக நடத்தப்படுகின்ற 04 கற்கைநெறிகளில் இரு செமஸ்டரில் 58 பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை அளவில் 2,555 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த அளவு பாடங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த விரிவுரை அளவில் 30 சதவீதத்திற்கு அதிகமான அளவில் காணப்பட்டது. | மாணவ மறியல்கள்/எதிர்ப்புக்கள் காரணத்தினால் விரிவுரைகளுக்காக பங்குப்பெறாமை, நீண்டகால வகுப்பு நிறுத்தல்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவையினால் அவ்வப்போது படிப்பினைகளுக்கு தாக்கமளிக்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டினுள் பல கற்கைநெறிகளில் கல்வி நடவடிக்கைகள் நிகழ்நிலையில் (Online) மேற்கொள்ளப்பட்டன. அங்கு விரிவுரை மணித்தியால பூர்த்தி செய்வதில் தெளிவான சிரமம் காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மணித்தியால அளவுகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களுக்கு கோட்பாட்டுசார் அறிவு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறை பயன்பாட்டுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளுக்காக 2014 திசெம்பர் மாதத்தில் ரூபா 1,250,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த Wheel Alignment Gurage Aligner 680- EL உபகரணம் 2021 மார்ச் 29 ஆம் திகதி வரையில் மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய உபகரணம் பொருத்துவதற்காக போதுமான நில பகுதியொன்று இந்த நிறுவகத்தில் இல்லை. எங்கள் நிறுவனத்திற்கு மாற்று காணியொன்று பெறப்பட்டதன் பின்னர் தொடர்புடைய உபகரணங்கள் குறித்த தரத்தின் பிரகாரம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் உயர்ந்த வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |